மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 234/2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.பாண்டிசிவகாமி, கிரேடு III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : சுப்பு (வா.சா.1)<br>த/பெ.க/பெ :<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

05.03.2026

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை –</u>

1. வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு நான் தகவல் சொன்னேனா என்றால் இல்லை. யார் தகவல் சொன்னது என்றால் எனக்கு தெரியாது. (சாட்சி தற்போது தான்தான் வழக்கறிஞரிடம் வழக்கு கொடுத்ததாக சொல்கிறார்). எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 786 சதுர அடி வாங்கியுள்ளேன், அதில் 100 சதுர அடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ12 வரைபடத்தில் நான்குமால் அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ12 வரைபடத்தில் எனது வீட்டின் கிழமேல், தென்வடல் அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் என்ன என்றால் சர்வே எண். 110/37 ஆகும். அதற்கு தெற்கு பக்கம் பிரதிவாதிகளின் வீடு உள்ளதா என்றால் உள்ளது.

2. பிரதிவாதிகளின் வீட்டிற்கு வடக்கு பார்த்த தலைவாசல் உள்ளது என்றால் தெற்கு பார்த்த வாசல்தான் உள்ளது. பிரதிவாதி வீட்டின் வடக்கு வாசல் வழியாக கிழக்கே உள்ள சர்வே பாதைக்கு செல்ல பொதுசந்து வழியாக செல்லவேண்டும் என்றால் அது எங்களுடைய சந்து ஆகும். வீடு வாங்கிய காலம் முதல் பிரதிவாதிகள் அந்த சந்தினைதான் கிழக்கு பக்க பாதைக்கு செல்ல பயன்படுத்தி வருகிறார் என்றால் இல்லை.

3. சர்வே எண். 110/37 –ற்கு கிழக்கு பக்கம் அரசு சர்வே பாதை உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வடக்கு பக்கம் பேயன் மகன் கணேசன் காலியிடம் உள்ளது என்றால் சரிதான். மேற்கே அங்காள ஈஸ்வரி கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது

என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய ராஜம்மாளின் கணவர் பெயர் வெள்ளையன் என்றால் சரிதான். வெள்ளையனின் தகப்பனார் பெயர் வீரணன் என்றால் சரிதான். பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள 16x16 அளவுள்ள வீடு மட்டும்தான் வீரணனுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை, காலியிடத்தையும் சேர்த்துதான் பத்திரம் போட்டுக் கொடுத்தார்கள். ராஜம்மாளுக்கு காலியிடம் பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது அவருக்கு பூர்விக நிலம் ஆகும்.

4. சர்வே எண். 110/37—ல் உள்ள காலியிடம் உண்ணாமலையம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை, எனக்கு பாத்தியப்பட்டது. உண்ணாமலையம்மாள் யார் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. உண்ணாமலையம்மாள் கணவர் முருகன் செட்டியார் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி குடியிருக்கும் வீடு சர்வே எண். 110/47ம் சர்வே எண். 110/37—ல் உள்ள காலியிடமும் முருகன் செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. முருகன் செட்டியார் மனைவி உண்ணாமலையம்மாளை சரிவர பராமரிக்காததால் நீதிமன்றத்தில் சர்வே எண். 110/37—ல் உள்ள சொத்தை ஜப்தி செய்ய கேட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. உண்ணாமலையம்மாள் கேட்டுக் கொண்டதின் அடிப்படையில் சொத்தானது மாண்புமிகு மதுரை மாவட்ட 3வது கூடுதல் சார்பு நீதிமன்றம் மூலம் ஏலம் ஒப்படைப்பு செய்யப்பட்டு உண்ணாமலையம்மாள் அந்த சொத்தினை பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. உண்ணாமலையம்மாள் சர்வே எண். 110/37—ல் உள்ள காலியிடத்தை தன் கைவசம் வைத்துவிட்டு சர்வே எண். 110/47—ஐ 1ம் பிரதிவாதிக்கு விற்றுள்ளார் என்றால் சரியல்ல. உண்ணாமலையம்மாள் சர்வே எண். 110/37—ல் உள்ள காலியிடத்தை அங்காள ஈஸ்வரி கோவில் பக்தர்கள் புழங்கி வந்தார்கள் என்றால் சரியல்ல. உண்ணாமலையம்மாள் வகையறாவினர் தற்சமயம் ஊரில் இல்லாததால் யூடிஆரில் தவறுதலாக பட்டாவை மாற்றி ராஜம்மாள் எனக்கு விற்றுள்ளார் என்றால் சரியல்ல.

6. நான் முழு சொத்திற்கும் விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா இடத்தில் கிரையம் வாங்கிய காலத்தில் இருந்து புழங்கி வருகிறார்கள் என்றாலும் வழக்கிற்காக

தற்போது ஆஸ்படாஸ் சீட் போட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ1ன் படி ராஜம்மாள் சர்வே எண். 110/37ல் உள்ள சொத்து முழுவதையும் எழுதிக் கொடுக்க அவருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ2 பட்டா பின்பக்கம் வரைபடம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. 16/x16வீடானது எப்போது இடிந்தது என்றால் 2 வருடங்கள் இருக்கும்.

7. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ3, வாசாஆ4, வாசாஆ5 ரசீதுகள் ஆகியவை தாவா சொத்துக்களுக்குரியது இல்லை என்றால் சரியல்ல. 16/x16 வீடானது நான் கிரையம் பெறும்போதே இடிந்து இருந்தது என்றால் சரியல்ல. வாசாஆ6 மின் கட்டண ரசீது தாவா வீட்டிற்குரிய ரசீது கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கட்டுமானங்கள் நாங்கள் அளக்கும்போது இருந்தது என்றால் ஆமாம், ஆனால் அப்போதுதான் கட்டினார்கள். வாசாஆ7 புகார் மனுவில் மேற்படி கட்டுமானம் எப்போது கட்டப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த ராஜம்மாள் எங்கே உள்ளார் என்றால் காரியாபட்டியில் உள்ளார்.

8. வாசாஆ10, வாசாஆ11 ஆகியவை இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட தாவா சொத்திற்குரியது கிடையாது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஏதாவது ஆட்சேபனை உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கும் வாசாஆ12 பிராது வரைபடத்திற்கும் வேறுபாடு உள்ளதால் எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சந்து பிரச்சனை காரணமாகதான் பிரதிவாதிகளுடன் வீண் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.